பக்கங்கள்: 07
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 30 வியாழக்கிழமை 15.09.2022 கதிர் 201

## நினைவேந்தலுக்கு தடைஎதுவுமில்லை

### ஜனாதிபதியின் நிலைப்பாடு அதுவே என்கின்றார் பிரதமர்

போர்க்காலத்தில் இறந்தவர்கள் எவராக இருந்தாலும் அவர்களின் உறவினர்கள் அல்லது அவர்கள் சார்ந்த ☞ 2

# நல்லூரில் திலீபனின் நினைவேந்தல் உணர்வெழுச்சியுடன் இன்று ஆரம்பம்





(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து பன்னிரு நாட்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுத் தன்னைத் தமிழ் மக்களுக்காக ஆகுதியாக்கிய தியாக தீபம் திலீபனின் 35ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று யாழ்ப்பாணத்தில் உணர்வெழுச்சியுடன் ஆரம்பமானது.

நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின்நினைவிடத்தில்திலீபன்உண்ணாவிரதத்தை ஆரம்பித்த நேரம் காலை 9.45 மணியளவில் நினைவேந்தல் நிகழ்வு ஆரம்பமானது.

மாவீரர்களின் பெற்றோரால் ☞ 2

# இலங்கை அரசு இனியும் ஏமாற்றாதவாறு இறுக்கமான தீர்மானத்தை நிறைவேற்றுக

### ஐ.நாவையும் உறுப்பு நாடுகளையும் கோருகின்றார் இரா.சம்பந்தன் எம்.பி.

மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களிலிருந்து இலங்கை அரசும், அதன் படைகளும் தப்பிக்க முடியாதவாறு மிகவும் இறுக்கமான தீர்மானம் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட வேண்டும். அதற்கு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் முழுமையான ஆதரவை வழங்க வேண்டும். ☞ 2



## நினைவேந்தல் நிகழ்வில் அரசியல் செய்யாதீர்கள்!

### மாவீரர்களின் பெற்றோர் சார்பில் கோரிக்கை

(ந.லோகதயாளன்)

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலில் அரசியல் பேசிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர் சட்டத்தரணிசுகாசைக்கண்டித்து விடுதலைப்புலிகளின் மூத்த போராளி முத்துக்குமார் மனோகர் (பஷீர் காக்கா) மாவீரர்களின் பெற்றோர் சார்பில் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். ☞ 2

## தெற்கில் ஒருவர் சுட்டுக்கொலை!

பேலியகொடை, ரயில் வீதி - குருகுல வித்தியாலயத்துக்கு அருகாமையில் நேற்றிரவு ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே, துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். ☞ 2


## தலைமைப் பிக்குவைக் கொன்றுவிட்டு டுபாய் தப்பியோட முயன்ற இளம் பிக்கு

### கட்டுநாயக்கவில் வசமாகச் சிக்கினார்

சீதுவ பகுதியிலுள்ள விகாரை ஒன்றின் மூத்த தேரர் ஒருவர் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் இளம் தேரர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். டுபாய் நோக்கிப் பயணிக்கத்தயாராகவிருந்த 18 வயதான தேரரே கட்டுநாயக்கவில் கைது செய்யப்பட்டுள்ளாரென்றுபொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ☞ 2

## யாழ். பல்கலையிலும் திலீபனுக்கு அஞ்சலி





(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு இன்று காலை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பிரதான தூபி வளாகத்தில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் பிரதான வாயில் முதல் தமிழ்த் தேசிய எழுச்சிக்கொடி கட்டப்பட்டு பிரதான தூபியில் மாணவர்களால் அமைக்கப் பெற்ற நினைவாலயத்தில் போரால் பாதிக்கப்பட்ட மாணவனால் பொதுச் சுடரேற்றப்பட்டது.

அதைத் தொடர்ந்து மாணவர்களால் ☞ 2

## மட்டக்களப்பு நகரில் நாளை ஆர்ப்பாட்டம்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு கொழும்பு - மகசின் சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருக்கும் கைதிகளுக்கான ஆதரவுப் போராட்டம் மட்டக்களப்பில் நாளை நடைபெறவுள்ளது.

'பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒழிப்போம்' என்ற தொனிப்பொருளில் ☞ 2

## பௌத்த — சிங்கள நாட்டில் புலிகளை நினைவேந்த அனுமதிக்க முடியாது!

### கடும் துவேசத்துடன் சரத் வீரசேகர கருத்து

பௌத்த- சிங்கள நாட்டில் கூண்டோடு அழிக்கப்பட்ட புலிப் பயங்கரவாதிகளைப் போற்றித் துதிபாடவோ அல்லது அவர்களை நினைவேந்தவோ அனுமதி கிடையாது - என்று கடும் துவேசத்துடன் கருத்து வெளியிட்டுள்ளார் முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர.

தமிழ் மக்களின் விடுதலைக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து ☞ 2

## நல்லூரில்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுச் சுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து, திலீபனின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் மாவீரர்களின் பெற்றோர், உறவுகள் மற்றும் மதகுருமார், பொதுக்களுடன் அரசியல் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

இந்த அஞ்சலி நிகழ்வு தொடர்ந்தும் 12 நாட்களும் முன்னெடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

1987ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி நல்லூர் முன்றலில் தமிழினத்தின் விடிவுக்காக நீராகாரம் கூட அருந்தாது உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்த திலீபன், பன்னிரண்டாவது நாளில், செப்டெம்பர் மாதம் 26ஆம் திகதி தமிழ் மக்களுக்காகத் தன்னை ஆகுதியாக்கினார்.

மீளக்குடியமர்தல் என்ற பெயரில் இலங்கைத்தீவின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புதிதாக திட்டமிடப்படும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

சிறைக் கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.

அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.

தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

-ஆகிய ஐந்து அம்சக் கோரிக்கைகளே தியாக தீபம் திலீபனால் முன்வைக்கப்பட்டன.

## நினைவேந்தலுக்கு..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனத்தவர்கள் அவர்களை அமைதியாக நினைவேந்த முடியும்.

- இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த காலங்களில் ஒவ்வொரு வருடமும் நினைவேந்தல் நிகழ்வுகள் வரும்போது இன ரீதியான, மொழி ரீதியான, மத ரீதியான கருத்து மோதல்கள் வெடிக்கின்றன. அந்த நிலைமை இனியும் தொடரக்கூடாது என்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியாகவுள்ளார்.

நினைவேந்தல்களை இறந்தவர்களின் உறவினர்கள் அல்லது அவர்கள் சார்ந்த இனத்தவர்கள் அமைதியாகக் கடைப்பிடிக்க வேண்டும். அந்த நிகழ்வுகள் அரசியல் நிகழ்ச்சி நிரல் உள்ளதாகவோ அல்லது இன ரீதியான கிளர்ச்சியைத் தூண்டுபவையாகவோ இருக்கக்கூடாது.

அதேவேளை, தடைசெய்யப்பட்ட அமைப்புக்களின் கொடிகளைப் பயன்படுத்தியோ அல்லது அந்த அமைப்புக்களுக்கு புகழாரம் சூட்டியோ நினைவேந்தல் நிகழ்வுகளைக் கடைப்பிடிக்க முடியாது. அவற்றை மீறினால் சட்டங்களுக்கமைவாகவே நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் - என்றார்.

## மட்டக்களப்பு..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை 7.30 மணி முதல் காந்தி பூங்கா முன்றலில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும்.

இந்தக் கொடிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க - அதிலும் தமிழ் பேசும் மக்கள் மீது கூடுதலாகத் திணிக்கப்படும் இந்தச் சட்டத்துக்கு எதிராக இந்தப் போராட்டத்தில் அனைவரும் கலந்துகொண்டு உங்கள் ஆதரவை வழங்குங்கள் - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம், ஊரெழுவில் 1963ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி இராசையா பார்த்தீபன் என்ற இயற்பெயர் கொண்ட திலீபன் பிறந்தார்.

அவர் தனது 24 ஆவது வயதில் தமிழினத்துக்காகத் தன்னை ஆகுதியாக்கிக் கொண்டார்.

நான் மரணத்தை மகிழ்ச்சியுடனும் பூரண திருப்தியுடனும்தான் தழுவிக் கொள்கின்றேன். என் தலைவரின் தலைமையில் அனைத்து மக்களும் கிளர்ந்தெழுவார்கள் என்பதை நான் உறுதியாக நம்புகின்றேன். இந்த மாபெரும் மக்கள் புரட்டி என்றோ ஒருநாள் எம் இலட்சியத்தை நிறைவேற்றியே தீரும். எம் மக்கள் மீது கொண்ட அசையாத நம்பிக்கையின் பேரில் - அவர்கள் மீது கொண்ட தாளாத பாசத்தின் பெயரில் அவர்களின் விடிவுக்காக நான் என் தோழர்களை நோக்கி மெதுவாகப் போய் கொண்டிருக்கின்றேன் - என்று உண்ணாவிரத மேடையில் பேசிய திலீபன் கூறியிருந்தார்.

தியாகதீபம்திலீபனின்நினைவேந்தல் தமிழ் மக்களால் ஆண்டுதோறும் உணர்வெழுச்சியுடன் தமிழர் தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

## பௌத்த-சிங்கள..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பன்னிரு நாட்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிர் நீத்த யாக தீபம் திலீபனின் 35 ஆவது ஆண்டு நிவைவேந்தல் நிகழ்வு இன்று முதல் எதிர்வரும் 26ஆம் திகதி வரை தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கிலும், தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் தேசமெங்கும் கடைப்பிடிக்கப்படவுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை பௌத்த - சிங்கள நாடு. இந்த நாட்டுக்குள்தான் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அமைந்துள்ளன. வடக்கு, கிழக்கு வேறு நாடு அல்ல. அந்த மாகாணங்கள் தமிழர்களுக்குச் சொந்தமானவையும் அல்ல.

வடக்கு, கிழக்கில் புலிப் பயங்கரவாதிகளைப் போற்றித் துதிபாடவோ அல்லது அவர்களை நினைவேந்தவோ அனுமதி கிடையாது.

தமிழ் மக்களும், அவர்களின் பிரதிநிதிகளும் நாட்டிலுள்ள சட்டங்களுக்கு மதிப்பளித்து நடக்க வேண்டும். சட்டங்களை மீறினால் அவர்களைக் கைதுசெய்து சிறையில் அடைக்க வேண்டும் - என்றார்.

## யாழ்.பல்கலை..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுடர் ஏற்றப்பட்டு தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்துக்கு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக தமிழ் மாணவர்களுடன் இஸ்லாமிய, சிங்களமாணவர்களும்உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டனர்.

அத்துடன், யாழ். பல்கலை கல்விசாரா ஊழியர்கள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

தொடர்ச்சியாக எதிர்வரும் 26ஆம் திகதி வரை மாணவர்களால் நினைவேந்தல் முன்னெடுக்கபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நினைவேந்தல்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்லூரில் இன்று நடைபெற்ற தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் ஆரம்பிப்பதற்கு முன்னர் சட்டத்தரணி சுகாஷ் ஒலிபெருக்கி வாயிலாக அரசியல் கருத்துக்களைத் தெரிவித்தார். இதன்போது நினைவேந்தலில் கலந்துகொண்ட விடுதலைப்புலிகளின் மூத்த போராளி பஷீர் காக்கா, நினைவேந்தல்களில் கட்சி அரசியலைக் கலந்து அவற்றின் புனிதத்தை மாசுபடுத்த வேண்டாம் எனத் தெரிவித்திருந்தார். இதனால் அங்கு சிறிய சலசலப்பு ஏற்பட்டது.

இந்நிலையிலேயே குறித்த விடயம் தொடர்பாக அறிக்கை ஒன்றை பஷீர் காக்கா வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

தியாகதீபம்திலீபனின்நினைவேந்தல் மட்டுமல்ல எந்த நினைவேந்தல்களிலும் கட்சி அரசியலை கலந்து அவற்றின் புனிதத்தை மாசுபடுத்த வேண்டாம் எனத் தயவுடன் வேண்டுகிறேன். அனைத்து மாவீரர்களின் பெற்றோர் சார்பிலும் அறிவிலியின் தந்தையான முத்துக்குமார் மனோகர் (பஷீர் காக்கா) ஆகிய நான் வேண்டுகோளை விடுகின்றேன்.

இன்று திலீபன் நினைவு ஆரம்ப நிகழ்வு தொடங்கும் முன்னர் பிறிதொரு அணியினரைச் சாடும் வகையில் சட்டத்தரணி சுகாஷ் உரையாற்றியமை எமக்கு வேதனையை உண்டாக்குகின்றது.

நேற்று இவர் சார்ந்த கட்சியின் ஏற்பாட்டாளரும் திலீபனை நேரில் கண்டவர்களில் ஒருவருமாகிய பொன். மாஸ்டரிடம் இந்நிகழ்வை பொது நிகழ்வாக நடத்துவதில் உங்களுக்குள்ள சங்கடங்கள் என்னவென்று கேட்டேன். எதுவும் இல்லை என்று பதிலளித்தார். அது திருப்தி அளித்தது.

அந்த நம்பிக்கையைச் சிதறடிக்கும் விதத்தில் சட்டத்தரணி சுகாஷ் இன்று நடந்து கொண்டார். ஏற்கனவே மாவீரர் நாள் நிகழ்வுகளை ஏனைய கட்சிகளைத் தாக்கும் களமாகப் பயன்படுத்த வேண்டாம் எனக் அக்கட்சியின் தலைவர் கஜேந்திரகுமாரை நேரில் சந்தித்து வேண்டுகோள் விடுத்திருந்தேன்.

அதனைக் கடைப்பிடிப்பதாக அவர் என்னிடம் உறுதியளித்தார். எனினும், கிளிநொச்சியில் நிகழ்ந்த மாவீரர்களின் பெற்றோருடைய கௌரவிப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சாடியமை பற்றி செய்தி பத்திரிகையில் வெளியான போது மிகவும் வேதனைப்பட்டேன்.

அவ்வாறான நிலைமை மீண்டும் ஏற்படக்கூடாது என்பதற்காகப் பொன்.மாஸ்டரை சந்தித்து உரையாடினேன். எனவே, இவ்வருடம் திலீபனின் நினைவு நிறைவடையும்வரைக்கும் அரசியலைக் கலக்காமல் ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு மன்றாட்டமாக அனைத்துக் கட்சிகளையும் கேட்டுக்கொள்கிறேன். எமது உணர்வுகளை எதிர்காலத்தில் மதிப்பார்கள் என நம்புகின்றேன் - என்றுள்ளது.

## இலங்கை அரசு..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர்இரா.சம்பந்தன்வலியுறுத்தியுள்ளார்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத் துவதற்கு இலங்கை தவறியுள்ள நிலை யில், மனித உரிமை மீறல் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச சட்டங்களின் கீழ் விசாரணைகளை மேற்கொள்வதற்கும் தண்டனை வழங்குவதற்கும், சர்வதேச சட்டவரம்பின் மூலமான வழிமுறைக ளைப் பயன்படுத்தல் மற்றும் நம்பத் தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டிருப்பவர்களுக்கு எதிராகத் தடைகளை விதித்தல் உள்ளடங் கலாகப் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்காக முன்னெடுக்கப்படக்கூடிய முயற்சிகளுக்கும் உறுப்பு நாடுகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் உரையாற்றிய ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பதில் ஆணையாளர் நாடா அல் – நஷீப் வலியுறுத்தியிருந்தார்.

அதேவேளை, இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டின் 17 பக்க எழுத்துமூல அறிக்கை ஏற்கனவே வெளியிடப்பட்ட நிலையில், அதன் சாராம்சத்தையும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் பதில் ஆணையாளர் வாசித்திருந்தார்.

இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப் பினருமான இரா. சம்பந்தனிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் தற்போது நடைபெற்று வருகின்றது. இந்தக் கூட்டத் தொடரின் ஆரம்ப நாளில் இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு வின் பதில் ஆணையாளர் ஆற்றிய உரையை வரவேற்கின்றோம்.

அதேவேளை, இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரால் ஏற்கனவே வெளி யிடப்பட்டிருந்த அறிக்கையையும் நாம் வரவேற்கின்றோம்.

ஐ.நா. மனித உரிமைகள் பேர வையில் இலங்கை தொடர்பில் ஏற்க னவே நிறைவேற்றப்பட்ட தீர்மானங் களின் பரிந்துரைகளை இலங்கை அரசு நிறைவேற்றவில்லை. மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான ஐ.நா. தீர்மானத்தின் பரிந்துரைககளை இலங்கை அரசு தொடர்ந்து உதாசீனம் செய்து வருகின்றது.

அரசியல் தீர்வு சம்பந்தமான பரிந்துரையையும் கூட இலங்கை நடை முறைப்படுத்தவில்லை. பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்னமும் அமுலில்தான் இருக்கின்றது. அதன் கீழ் கைது நடவ டிக்கைகள் தொடர்கின்றன.

ஐ.நா.வுக்கும் சர்வதேச நாடுகளுக் கும் இலங்கை அரசு பல்வேறு வாக்கு றுதிகளை வழங்கியிருந்த போதிலும் அவற்றில் எதுவும் இன்னமும் நிறை வேற்றப்படவில்லை. அந்த வாக்குறுதிகளைக் கிடப்பில் போட்டுவிட்டு சர்வதேச சமூகத்தை இதுவரை காலமும் இலங்கை அரசு ஏமாற்றி வந்தது.

மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களிலிருந்து இலங்கை அரசும், அதன் படைகளும் தப்பிக்க முடியாதவாறு மிகவும் இறுக்கமான தீர்மானம் இம்முறை ஜெனிவாவில் நிறைவேற்றப்பட வேண்டும். இதற்கு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் முழுமையான ஆதரவை வழங்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை வழங்கியே தீர வேண்டும் – என்றார்.

## தெற்கில் ஒருவர்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

பாதாளஉலகக்குழுஉறுப்பினரான மட்டக்குளிய சூட்டிஉக்குகேவின் மைத்துனரான ஆனமலு ரங்க என்பவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய சந்தேகநபர்களுள் ஒருவரான மொஹம்மட் ஹனீபா மொஹம்மட் ரிம்ஸான் என்பவரே உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்ட நபர்களை அடையாளம் காணப் பேலியகொடைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தலைமைப்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தரணி நிஹால் தல்தூவ தெரிவித்தார்.

சீதுவ - வேத்தேவே பகுதியிலுள்ள விகாரை ஒன்றின் தலைமை தேரரின் சடலம், குறித்த தேரர் தங்கியிருந்த அறையிலிருந்து நேற்று மாலை மீட்கப்பட்டது.

குறித்த அறையிலிருந்து துர்நாற்றம் வீசுவதாகக் கிடைத்த தகவலுக்கு அமைய, பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது தேரரின் சடலம் மீட்கப்பட்டிருந்தது.

உயிரிழந்த தேரரின் கண்கள் கட்டப்பட்டு, வாய் துணியால் அடைக்கப்பட்டவாறு துணியால் போர்த்தப்பட்ட நிலையில் சடலம் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

50 வயதான தேரரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது.

இதேவேளை, குறித்த விகாரையிலிருந்த ஜீப் மற்றும் கார் ஒன்றும் காணாமல்போயுள்ளது. இரண்டு வாகனங்களும் தற்போது மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபரைக் கைது செய்வதற்கான விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இறைமை எனும் கயிறு

காலத்துக்கு காலம் – நேரத்துக்கு நேரம் – வியாக்கியானம் மாறும் விவகாரம் அல்ல இறைமை.

நாட்டின் இறைமை என்ற விடயத்தைத் தங்களின் அரசியலுக்கு ஏற்ப விவகாரமாக்குகின்றனர் தென்னிலங்கை அரசியல் தலைவர்கள்.

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் இலங்கையில் இடம் பெற்ற யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மோசமான மனிதஉரிமை மீறல்கள் போன்றவை தொடர்பில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் இலங்கையின் இறைமையை மீறுகின்றன, அதனால் அவற்றை ஏற்க முடியாது என்று இலங்கை இப்போது திரும்பத் திரும்பக் கதை விடுகின்றது.

இலங்கையில இடம் பெற்ற மோசமான சம்பவங்கள் குறித்து உண்மைகளைக் கண்டறிந்து, நீதியையும் பொறுப்புக் கூறலையும் நிலைநாட்டுவதற்கு சர்வதேசத் தரப்புக்கள் சம்பந்தப்பட்ட விசாரணைப் பொறிமுறை அமைக்கப்பட வேண்டும் என்ற ஜெனிவாவின் தீர்மான வாசகமே நாட்டின் இறைமையை மீறும் செயல் என்று கதை விடுகின்றது கொழும்பு.

இதில் இரண்டு விடயங்கள் உள்ளன.

ஒன்று – தானும் உள்நாட்டில் நீதியான விசாரணை ஒன்றை முன்னெடுக்காமல், 13 ஆண்டுகளாக இழுத்தடித்துக் கொண்டுதான் இந்தக் கதையை அவிழ்த்து விடுகிறது அது.

அடுத்தது – சட்டம் மற்றும் அரசமைப்பு ரீதியாக இந்தப் பொறிமுறை நாட்டின் இறைமையை மீறும் நடவடிக்கை அல்ல என்பதை 2015 ஆம் ஆண்டில் இலங்கை தொடர்பான ஜெனிவாவின் 30/1 இலக்க தீர்மானத்தை இலங்கை தானே அனுசரணைப் பணி வகித்து, அந்தத் தீர்மான வாசகங்களை தானும் சேர்ந்து முன்மொழிந்து, ஏகமனதாக ஏற்றுக் கொள்ளச் செய்ததன் மூலம் அதனை அங்கீகரித்து விட்டு, இப்போது பொறுப்புக் கூறல் கத்தி கழுத்துக்கு நெருங்கி வந்ததும் தனது நிலைப்பாட்டில் இருந்து குத்துக்கரணம் அடித்து, தப்புவதற்கு இப்படிக் கதை விடுகிறது கொழும்பு.

2015 இல் இந்தத் தீர்மானம் ஜெனிவாவுக்கு வந்த போது இலங்கை அரசின் பிரதிநிதிகளாக அப்போதைய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் நீதி அமைச்சர் (இதே) விஜயதாஸ ராஜபக்ஷவும் இந்தச் சர்ச்சையை கிளப்ப, அதை அடுத்து அமெரிக்காவிலிருந்து அரசமைப்புச் சட்டம் தொடர்பான கலாநிதிகளான இரு பெண்மணிகள் ஜெனிவாவுக்கு விசேடமாக அழைக்கப்பட்டு, பேசி, ஆராய்ந்து முடிவு கண்ட விடயம் இது. அப்போது இலங்கை – அமெரிக்கா – தமிழர் தரப்பு என்று முத்தரப்பு இணக்கப்பாட்டின்தான் 30/1 தீர்மானத்தில் சர்வதேச பங்களிப்புடனான விசாரணைப் பொறிமுறை வாசகம் சேர்க்கப்பட்டது, அந்தத் தீர்மானத்திற்கு இலங்கையும் அனுசரணைப் பணி வழங்கியது.

அது மாத்திரமல்ல, அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் விருப்புக்கு அமையவே 'சர்வதேச விசாரணையாளர்கள்' என்ற பதம் 'கொமன் வெல்த் மற்றும் சர்வதேச நாடுகளின் விசாரணையாளர்கள்' என மாற்றிக் கொள்ளப்பட்டது.

ஷிராணி பண்டாரநாயக்கா பிரதம நீதியரசர் பதவியில் இருந்து வல்வந்தமாகத் துரத்தப்பட்டமையையொட்டி இதே விஜயதாஸ ராஜபக்ஷ 2012, இல் நாடாளுமன்றத்தில் தாம் சமர்ப்பித்த தனிநபர் சட்டமூலத்தில், 'இத்தகைய விடயங்களை விசாரிப்பதற்கு கொமன்வெல்த் அமைப்புகளுக்கு உட்பட்ட ஏதோ ஒரு நாட்டின் உயர்நீதிமன்ற நீதியரசராக இருக்கின்ற அல்லது இருந்த மூவர் கொண்ட விசாரணை குழு அமைக்கப்பட வேண்டும் என்று' தாமே சட்ட வடிவில் பிரேரணை அளித்துள்ளார்.

இப்போது யுத்த காலக் குற்றங்களை சுயாதீன சர்வதேச விசாரணை குழு மூலம் விசாரித்தால் பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் உண்மை முகம் அம்பலமாகிவிடும் என்று அஞ்சி, இப்படி இறைமைக் கயிறு விடுகின்றார்கள் தென்னிலங்கைத் தலைவர்கள்.

# தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் மோகன் சாகும் வரை உண்ணா விரதம்!



மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி காணி மாபியாக்களுக்கு ஆதரவாகச் செயற்படுகிறார் எனவும் அவருக்கு எதிராக நடவடிக்கையெடுக்க வலியுறுத்தி தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் கணபதிப்பிள்ளை மோகன் சாகும் வரையிலான உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

நேற்று (புதன்கிழமை) பிற்பகல் முதல் மட்டக்களப்பு நகரின் உயிர்நீத்த ஊடகவியலாளர்கள் நினைவுத்தூபியருகே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை மோகன் ஆரம்பித்துள்ளார்.

காணி மாபியாக்களுக்கு சாதகமாக சட்டத்தை காய்நகர்த்தும் ஏறாவூர் பொலிஸ் அதிகாரி, காணி மாபியாக்களின் கைக்கூலி.ஏறாவூர் பொலிஸ் நிலைய அதிகாரி மீது விசாரணை நடத்துங்கள் போன்ற சுலோகங்களை தாங்கியவாறு இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

ஏறாவூர், புன்னக்குடா தளவாய் பகுதியில் அமைந்துள்ள காணி மாபியாக்களின் நடவடிக்கைகளுக்கு ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மிகவும் துணை புரிந்துகொண்டிருக்கின்றார். அவரது ஆசீர்வாதத்தில் சில செயற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

என்னுடைய சொந்தக்காணி 21 ஆம் திகதி பொலிஸ் பொறுப்பதிகாரியினுடைய வழிநடத்தலில் பலாத்காரமாகப் பறிக்கப்பட்டது. இதுதொடர்பில் நான் அவரிடம் பலமுறை கெஞ்சியும் அவர் அதனை மறுதலித்து காணி மாபியாக்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டுவந்திருக்கின்றார். இதற்கு எதிராக நான் நீதி கேட்டு வந்திருக்கின்றேன். முற்றுமுழுதாக என்னுடைய பிரச்சினைகள் விசாரிக்கப்பட வேண்டும்.

பலவந்தமாக அந்தக் காணியினுள் காணி மாபியாக்களின் ஆள்களை குடியமர்த்திவிட்டு இன்று காணிப்பிரச்சினையாக இருந்தால் நீதிமன்றம் செல்லுங்கள் என்கின்றார்.

நாங்கள் நீதிமன்றம் செல்லத் தயாராக இருக்கின்றோம். ஆனால் ஏறாவூர் பொலிஸ் பொறுப்பதிகாரியின் துணையுடன் பலவந்தமாக அங்கு குடியமர்த்தப்பட்ட குடும்பத்தையும் வேலியையும் அகற்ற வேண்டும். அதன் பின்னர் நாங்கள் நீதிமன்றம் செல்வதற்குத் தயாராக இருக்கின்றோம்.

மூன்று தினங்களுக்கு முன்பு எனது தோட்டத்தை பராமரித்துவந்த நபர் காணி மாபியாக்களால் வாளாலும் பொல்லாலும் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் ஏறாவூர் பொலிஸார் நீதிமன்றுக்கு தவறான தகவலை வழங்கி எதிரியை உடனடியாக விடுதலைசெய்ய உதவியதுடன் மூன்று முக்கியமான எதிரிகளைக் கைதுசெய்யவில்லை. அவர்கள் பொலிஸாரின் பாதுகாப்புடன் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள எங்கள் காணிக்குள் இன்னும் கத்தி, பொல்லுகளுடன்தான் உள்ளனர். இவர்களை ஏறாவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கண்டுகொள்ளவில்லை.

சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் தலைமையில் அங்குள்ள கிராம மக்கள், மரமுந்திரிகை கூட்டுத்தாபனம், நில அளவையாளர்கள் உட்பட பலரை அழைத்து விசாரணைசெய்து நியாயமான தீர்வை வழங்கவேண்டும். அதனை வலியுறுத்தி சாகும் வரையிலான இந்த உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளேன். - என்றார்.

# பிரித்தானிய யுவதியின் அடிப்படை உரிமை மீறல் மனு தள்ளுபடி!

இலங்கையிலிருந்து நாடு கடத்த குடிவரவு குடியகல்வு திணைக்களம் எடுத்துள்ள தீர்மானத்தை வலுவிழக்கச் செய்யக் கோரி, பிரித்தானிய யுவதி தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு ஏற்காது தள்ளுபடி செய்து உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

அத்துடன் மனுதாரரான பிரித்தானிய யுவதிக்கு ஒரு லட்சம் ரூபா வழக்கு கட்டணம் செலுத்துவதற்கும் உத்தரவிட்டே இவ்வாறு மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான புவனேக அளுவிஹாரெ, எஸ். துறை ராஜா, ஜனக் டி சில்வா ஆகியோரை உள்ளடக்கிய நீதியரசர்கள் குழாம் இதற்கான உத்தரவைப் பிறப்பித்தது. காலிமுகத்திடல் போராட்டத்துக்கு உதவி ஒத்தாசை வழங்கும் வகையில் செயற்பட்டார் என பிரித்தானிய பெண் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீதான அச்சுறுத்தலுக்கு எதிராகக் கவன ஈர்ப்பு!




மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீதான அச்சுறுத்தலிற்கு எதிரான கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று (புதன்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நேற்று காலை 9.30 மணி யளவில் கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்பாக இடம் பெற்றது.

இதன் போது, மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீதான அச்சுறுத்தல் தொடர்பில் பதாதைகள் ஏந்தியிருந்ததுடன், கோஷங்களையும் எழுப்பியிருந்தனர். தொடர்ந்து, மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீதான அச்சுறுத்தல் தொடர்பில் ஊடகங்களுக்கு வாசுகி கருத்துத் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு
வியாழக்கிழமை
15.09.2022

# பாகிஸ்தானில் குண்டுத் தாக்குதல்; பலி எண்ணிக்கை எட்டாக உயர்வு



பொவர், செப்.15

பாகிஸ்தானின் ஸ்வாட் மாவட்டத்தில் உள்ள பாரா பண்டாய் என்ற இடத்தில், நேற்று முன்தினம் வெடிகுண்டு தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கபல் தேசில் என்ற பகுதியின் தலைவரும், அமைதிக் குழு உறுப்பினருமான இத்ரீஸ் கான் என்பவரைக் குறிவைத்தே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் இத்ரீஸ் கான், இரண்டு பொலிஸார் உட்பட ஐந்து பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்ட நிலையில், சம்பவ இடத்தில் நேற்று மேலும் மூன்று உடல்கள் மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில், பலி எண்ணிக்கை எட்டாக உயர்ந்துள்ளது.

இந்த தாக்குதலை கண்டித்த கைபர் பக்துன்க்வா மாகாண முதலமைச்சர் மஹ்மூத் கான், "இதற்கு காரணமானவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படும்," என்றார்.

இந்த வெடிகுண்டுத் தாக்குதலுக்கு பொறுப்பேற்ற தெஹ்ரீக் தலிபான் பாகிஸ்தான் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் மொஹம்மத் குரசானி, "இத்ரீஸ் கான், பல ஆண்டுகளாக பாதுகாப்புப் படையினருக்கு ஆதரவளித்து வந்ததால், அவர் கொல்லப்பட்டார்," என்று அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவை அடுத்து பிரிட்டனிலும் பரவுகின்றது ஒமிக்ரோனின் புதிய திரிவு

### ஆனால் அச்சமடையத் தேவையில்லையாம்




லண்டன், செப்.15

அமெரிக்காவில் உருமாற்றம் அடைந்துள்ள ஒமிக்ரோன் வைரஸினுடைய புதிய வகைத்

திரிவு தற்போது இங்கிலாந்திலும் பரவியிருப்பது உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

பிரித்தானிய சுகாதார பாதுகாப்பு முகாமை, விரிவான ஆய்வறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. அந்த அறிக்கையில் கடந்த ஒகஸ்ட் 14 ஆம் திகதியிலிருந்து பெறப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் இரத்த மாதிரிகளின் அறிக்கையின் அடிப்படையில், மூன்று சத வீதத்துக்கும் அதிகமானவர்களின் மாதிரிகளில் யபு 4.6 என்கின்ற உருமாற்றம் அடைந்த ஒமிக்ரோனின் புதிய திரிவு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் திரிவானது பல நாடுகளிலும் தற்போது அடையாளம் காணப்பட்டு வருவதாகவும், ஒமிக்ரோனின் யபு 4 வகையில் இருந்த உருமாற்றம் அடைந்ததே தற்போது பரவுகின்ற வகை திரிவு எனவும் மருத்துவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். மேலும் இந்த வகை ஒமிக்ரோனால் மக்கள் அதிகளவில் அச்சமடையத் தேவையில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எலான் மஸ்க் வசமாகிறது டுவிட்டர் பங்குதாரர்கள் இணக்கம் தெரிவிப்பு




வாஷிங்டன், செப்.15

உலகின் பெரும் பணக்காரரான எலான் மஸ்க், சமூக ஊடக நிறுவனமான டுவிட்டரை,

(இந்தியப் பண பெறுமதியில்) ரூ.3.34 லட்சம் கோடிக்கு வாங்க உள்ளார் எனக் கடந்தசில மாதங்களுக்குமுன்அறிவித்தார். எனினும், இதற்கான ஒப்பந்தம் நிறைவடையவில்லை. டுவிட்டரில் 20 சதவீத கணக்குகள் போலி எனவும், 5 சதவீதத்திற்கும் குறைவாக போலி கணக்குகள் உள்ளதுஎன்றஆதாரத்தைநிரூபிக்காததால் டுவிட்டரை வாங்கும் ஒப்பந்தத்தை

கைவிடுவதாக எலான் மஸ்க் அறிவித்தார். இதனை எதிர்த்து டுவிட்டர் நிறுவனம் அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. அந்த வழக்கு எதிர்வரும்

ஒக்டோபர் மாதமளவில் விசாரணைக்கு வருகிறது.

இதற்கிடையே டுவிட்டர் நிறுவனத்தின் ஒவ்வொரு பங்கையும் தலா 54.20 டொலருக்கு வாங்கிக் கொள்வதாக எலான் மஸ்க் கூறியிருந்தார். இதற்கு டுவிட்டர் பங்குதாரர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக நடைபெற்ற டுவிட்டர் பங்குதாரர்கள் கூட்டத்தில், வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் பெரும்பாலானோர் டுவிட்டர் நிறுவனத்தை எலான் மஸ்கிடம் விற்க ஒப்புதல் அளித்தனர். எலான் மஸ்க் டுவிட்டர் நிறுவனத்தை வாங்கும் ஒப்பந்தத்தை ரத்து செய்தபோது டுவிட்டர்பங்குவிலைஅமெரிக்கபங்குச்சந்தையில் 41.8 டொலராகக் குறைந்தது.

இந்த நிலையில், பங்குதாரர்கள் எலான் மஸ்கிடம் விற்க சம்மதம் தெரிவித்ததை அடுத்து அந்நிறுவனத்தின் பங்கு விலை தற்போது அதிகரிக்கத் தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பங்குதாரர்கள் விற்க முன்வந்தாலும், எலான் மஸ்க் டுவிட்டர் நிறுவனத்தை வாங்க சம்மதிப்பாரா அல்லது வழக்கம்போல பின் வாங்குவாரா என்பதே தற்போதைய கேள்வியாக உள்ளது.

# அரசியல் கட்சியின் 3 தொண்டர்கள் பாகிஸ்தானில்கொன்றுவீசப்பட்டனர்

கராச்சி,செப்.15

பாகிஸ்தானில் துணை இராணுவப் படையினரின் காவலில் இருந்த முத்தாகிட குவாமி இயக்க கட்சியின் 3 தொண்டர்கள் சித்ரவதை செய்யப்பட்டு, கொன்று வீசப்பட்டு உள்ளமை பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

பாகிஸ்தானில் முத்தாகிட குவாமி இயக்கம் என்ற பெயரிலான அரசியல் கட்சி செயல்பட்டு வருகிறது. இக்கட்சியை சேர்ந்த 3 தொண்டர்கள், அந்நாட்டு இராணுவத்தினரால் கைது செய்து கொண்டு செல்லப்பட்டனர். அதன்பின்னர்,

கடந்த 7 ஆண்டுகளாக காணாமல் போயிருந்தனர். அவர்களை மீட்டு தரும்படி கோரி அவர்களது குடும்பத்தினர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளனர். தொடர்ந்து நீதிமன்றத்திற்கு அலைந்து வந்துள்ளனர். இந்நிலையில், இர்பான் பசாரத், அபித் அப்பாசி மற்றும் வாசீம் அக்தர் என்ற ராஜு ஆகிய அந்த 3 பேரும் நேற்று உயிரிழந்து கிடந்தனர். அவர்களது உடல்கள் சிந்த் மாகாணத்தின் வெவ்வேறு பகுதிகளில் கண்டெடுக்



கப்பட்டன. அவர்களது உடல்களில் சித்திரவதை செய்து கொல்லப்பட்டதற்கான அடை யாளங்கள் காணப் படுகின்றன. 3 பேரும் துணை இரா ணுவப் படையினரின் காவலில் விசாரிக்கப்பட்டு வந்தனர் என தெரிய வந்துள்ளது.

இவர்களில் இர்பான் பசாரத் சித்திக்கின் சகோதரி, கைது செய்யப்பட்ட தனது சகோதரரை காணவில்லை என்று சிந்த் மேல் நீதிமன்றத்தில் 2017 ஆம் ஆண்டு மனுத் தாக்கல் செய்துள்ளார். இதற்காக இர்பானின் சகோதரியை படையினர் மிரட்டியுள்ளனர்.

எப்.ஐ.ஆர். பதிவில் பாகிஸ்தான் இராணுவத்தினரின் பெயர் இடம்பெற்றதன் தொடர்ச்சியாக மற்றொரு சகோதரரான இம்ரான் பஸ்ராத்தும், படையினரால் கைது செய்யப்பட்டார். பல ஆண்டுகளாக நீதிமன்றத்திற்கு இர்பானின் குடும்பத்தினர் சென்று நீதி கேட்டு வந்த நிலையில், இர்பான் உள்பட 3 பேர் கொடுமையான முறையில், சித்திரவதை செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்டு, வெவ்வேறு இடங்களில் வீசப்பட்டு உள்ளமை அந்த பகுதி மக்களிடையே வருத்தம் மற்றும் அதிர்ச்சி ஏற்படுத்தி உள்ளது.

இதுபற்றி அக்கட்சியின் மத்திய ஒருங்கிணைப்பு குழு கடும் கண்டனம் தெரிவித்து உள்ளதுடன், இனப் படுகொலை என்றும் மற்றும் தொடர்ச்சியான தீவிர மனித உரிமை மீறல் எனவும் குற்றச்சாட்டுக் கூறியுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# அந்தமான் போர்ட் ப்ளேயரில் 2 நாள்கள் இந்திய முப்படைத் தளபதிகளின் மாநாடு




மாநாட்டில் பங்கேற்ற முப்படை தளபதிகள்

போர்ட் பிளேயர்,செப்.25

இந்திய முப்படைகளின் தளபதிகள் பங்கேற்ற 36 ஆவது மாநாடு, அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகளின் தலைநகர் போர்ட் ப்ளேயரில் நடைபெற்றது.

இந்தியாவின் கடல்சார் சேவை, ஒருங்கிணைந்த சேவை, திறன்களின் கூட்டு பலத்தை அதிகரித்தல் உள்ளிட்டவற்றை நோக்கமாக கொண்டு இந்த மாநாடு நடைபெற்றது. இரண்டு நாள்கள் நடைபெற்ற இந்த மாநாட்டில், அந்தமான், நிகோபார் கொமாண்ட் லெப்டினண்ட் தலைமை தளபதி ஜெனரல் அஜய் சிங், தெற்கு தீவின் லெப்டினண்ட் ஜெனரல் ஜேஎஸ். நைன், மேற்குக் கடற்படை வைஸ் அட்மிரல் அஜேந்திர பகதூர் சிங், தெற்கு கடற்படை வைஸ் அட்மிரல் ஹம்பிஹோலி, தென்பிராந்திய விமானப்படை தளபதி ஏர் மார்ல் ஜே.சலபதி, கிழக்கு கடற்படை வைஸ் அட்மிரல் ஏ.டி.எம். சஞ்சய் வத்சயன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்தியப் பெருங்கடல் பகுதியில் உள்கட்டமைப்பு, முப்படைகளின் பிராந்திய நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல், முப்படைகளின் வளர்ச்சியை அதிகரிப்பதற்கான வழிகள் மற்றும் முப்படைகளின் தயார் நிலை குறித்தும் இந்த மாநாட்டில் ஆலோசிக்கப்பட்டது.

மேலும் பாதுகாப்பில் கவனம் செலுத்துவது, போர்த் திறனை மேம்படுத்துவது, செயல்பாடுகளை மிகவும் பயனுள்ளதாக மாற்றுவதற்கான வழிகள் குறித்தும் இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டது.



# மோடி - பூட்டான் மன்னர் சந்திப்பு

புதுடெல்லி,செப்.15

பூட்டான் மன்னர் ஜிக்மே கேசர் நாம்கியேல் வாங்சுக் டெல்லியில் இன்று பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேசினார். அப்போது, இருதரப்பு உறவுகள் மற்றும் உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள்கள் குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர்.

வெளியுறவு செயலாளர் வினய் மோகன் குவாத்ராவையும் பூட்டான் மன்னர் வாங்சுக் சந்தித்தார்.

ராணி எலிசபெத்தின் இறுதிச்சடங்கில் பங்கேற்பதற்காக புறப்பட்ட பூட்டான் மன்னர், லண்டன் செல்லும் வழியில் இந்தியா வந்தார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அதில், நெருக்கமான மற்றும் தனித்துவமான இந்தியா - பூட்டான் நட்புறவை மேலும் வலுப்படுத்துவதற்கான பல்வேறு யோசனைகள் பற்றி பூட்டான் மன்னருடன் விவாதித்தார் எனவும், நட்புறவை மேம்படுத்துவதில் மன்னர் வழங்கிய யோசனைகளுக்குத் தாம் பாராட்டுகளைத் தெரிவித்தார் எனவும் மோடி குறிப்பிட்டுள்ளார்.

# கோவாவில் காங்கிரஸ் கட்சியில் இப்போது எதுவும் மிச்சமில்லை!

## முன்னாள் முதல்வர் திகம்பர் காமத் பேட்டி

கோவா மாநிலத்தில் ஆளும் பாரதிய ஜனதாக் கட்சி முதலமைச்சர் பிரமோத் சாவந்த் முன்னிலையில் நேற்று காங்கிரஸ் கட்சியின் முன்னாள் முதல்வர் திகம்பர் காமத் தலைமையில் 8 காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் பா.ஜ.கவில் இணைந்தனர். இதையடுத்து அம்மாநில சட்டசபையில் காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் பலம் 11ல் இருந்து 3 ஆக குறைந்துள்ளது.

மூன்றில் இரண்டு பங்கு எம்.எல்.ஏக்கள் காங்கிரஸில் இணைந்தமையால் கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் எம்.எல்.ஏக்கள் தகுதி நீக்க நடவடிக்கை எடுக்க வாய்ப்பில்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், பா.ஜ.கவில் இணைந்து பிறகு செய்தியாளர்களிடம் பேசிய கோவா மாநில முன்னாள் முதலமைச்சர் திகம்பர் காமத் கூறியுள்ளவை வருமாறு:-

காங்கிரஸில் தலைமை எங்கே இருக்கிறது? தலைமை இருந்திருந்தால், 2017 ஆண்டு 18 எம்.எல்.ஏக்கள் இருந்த போது நாங்கள் ஆட்சி அமைத்திருப்போம். திடீரென என்னிடம் கலந்தாலோசிக்காமல், எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து என்னை நீக்கி விட்டார்கள். இது நியாயமா? என்னை டெல்லிக்கு அழைத்து ஆலோசனை நடத்தியிருக்க வேண்டியது கட்சித் தலைமையின் பொறுப்பாகும். ஒரு முடிவெடுக்கணும்னு நினைச்சப்போ, நான் கோவிலுக்குப் போனேன், என் தொண்டர்கள் கோபமா இருக்காங்க, இனி காங்கிரஸுக்கு வேலை செய்ய வேண்டாம்னு எனக்கு சாதகமாக கோவில் பிரசாதம் வந்திருக்கு. நான் அவர்களிடம் (ஆதரவு எம்.எல். ஏக்கள்) உங்கள் விருப்பத்துக்கு ஏற்ப செயல்படுங்கள், நான் உங்களுக்கு ஆதரவளிக்கிறேன் என்று தெரிவித்தேன். இப்போது காங்கிரஸ் கட்சியில் எதுவும் மிச்சமில்லை. - இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, ராகுல் காந்தியின் இந்திய ஒற்றுமைப் பயணத்தின் வெற்றியைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், கோவாவில் 'ஆபரேன் கிச்சாட்' மூலம் எம்.எல். ஏக்களை பா.ஜ.க. மாற்றியுள்ளாக காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.



# லடாக்கில் ஆயிரம் ச.கி.மீ. பிரதேசத்தை சீனாவிடம் மோடி அரசு தாரைவார்ப்பாம்!

## குற்றம் சுமத்துகிறார் ராகுல் காந்தி



புதுடெல்லி,செப்.15

லடாக்கில் ஆயிரம் சதுர கிலோமீற்றர் பகுதியை சீனாவுக்கு இந்தியா தாரை வார்த்துள்ளதாக பிரதமர் மோடி மீது ராகுல் காந்தி குற்றச்சாட்டியுள்ளார்.

லடாக்கில் 2020 ஆம் ஆண்டு மே மாதம் இந்திய பகுதிக்குள் சீன இராணுவம் ஊடுருவ முயன்றது. இதனால் இரு நாட்டு இராணுவ வீரர்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டது. இதன் தொடர்ச்சியாக அங்குள்ள கல்வான் பள்ளத்தாக்கு பகுதியில் ஜூன் 15 ஆம் திகதி இரு நாட்டு வீரர்களுக்கு இடையே மோதல் நிகழ்ந்தது. இதில் இந்திய தரப்பில் 20 வீரர்கள் உயிரிழந்தனர். சீன ராணுவத்திலும் பலத்த உயிரிழப்பு நிகழ்ந்தது. இதைத்தொடர்ந்து அங்கு சர்ச்சைக்குரிய பல்வேறு பகுதிகளில் இரு நாடுகளும் படைகளையும், தளவாடங்களையும் குவித்தன.

இதனால் லடாக் எல்லையில் தொடர்ந்து பதற்றம் நிலவி வந்தது. எனவே அங்கு அமைதியை ஏற்படுத்துவதற்காக படை விலக்கல் குறித்து இரு நாடுகளும் அடுத்தடுத்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டன. குறிப்பாக இரு நாட்டு இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் பதினைந்துக்கும் மேற்பட்ட சுற்றுப் பேச்சுகள் நடந்தன. இதன் பலனாக பங்கோங் ஏரிக்கரைகள் மற்றும் கோக்ரா உள்ளிட்ட சர்ச்சைக்குரிய இடங்களில் இருந்து இரு தரப்பும் படைகளை திரும்ப பெற்றன. இதில் கடைசியாக கடந்த 8 ஆம் திகதி முதல் கோக்ராவின் 15 ஆவது கண்காணிப்பு முனையில் இருந்து இரு நாடுகளும் படைகளை விலக்கிக்கொண்டன.

இந்த நிலையில் லடாக்கில் பெருமளவிலா இந்திய பகுதிகளை சீனா ஆக்கிரமித்து இருப்பதா காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந் குற்றம் சாட்டியுள்ளார். இது தொடர்பாக அவ தனது டுவிட்டர் தளத்தில், 'லடாக் எல்லையி 2020 ஏப்ரல் மாதம் இருந்த நிலையை திரும் கொண்டு வரவேண்டும் என்ற இந்தியாவி கோரிக்கையை சீனா ஏற்க மறுத்து விட்டது அங்கு 1,000 சதுர கி.மீ. இந்திய பகுதிகளை ஒ சண்டை கூட போடாமல் சீனாவுக்கு பிரதம மோடி தாரை வார்த்து விட்டார்' என குறிப்பிட் இருந்தார். சீனா ஆக்கிரமித்துள்ள இந்த பகுதி களை எப்படி மீட்கப்படும் என்பதை மத்தி அரசால் நாட்டு மக்களுக்கு விளக்க முடியுமா? என அவர் கேள்வியும் எழுப்பி உள்ளார். லடாக்கி ஆயிரம் சதுர கி.மீ. பகுதிகளை சீனா ஆக்கிரமித் இருப்பதாக ராகுல் காந்தி கூறியுள்ள குற்றச்சாட் அதிர்வலைகளை கிளப்பி இருக்கிறது.



# பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலத்தின் நூற்றாண்டு விழா சிறப்பு மலர் வெளியீடு










(க.கிருபாகரன்)

பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலம் தேசிய
பாட சாலையினுடைய நூற்றாண்டு நிறைவின்
'உள்ளம்' சிறப்பு மலர் வெளியீட்டு விழ
நேற்றுக்காலை பாடசாலையின் கேட்போ
கூடத்தில் நடைபெற்றது.

இறைவணக்கத்துடன் ஆரம்பமான
இந்நிகழ்வில் அதிதிகள் உரைகள் இட
பெற்றன. அதனைத்தொடர்ந்து உள்ளம் சிறப்
மலர் வெளியிடப்பட்டது.

இந்நூலானது பாடசாலையின் சிறப்
விடயங்கள் மற்றும் ஆரம்பம் தொடக்க
இன்று வரையான பாடசாலையின் கற்றல்
செயற்பாடுகள், விளையாட்டு துறை செயற்
பாடுகள் மற்றும் பாடசாலை வளர்ச்சி பற்றிய
பல விடயங்களை கொண்டதாக வெளியிட
பட்டுள்ளது.

பாடசாலையின் அதிபரின் தலைமையில்
நடைபெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற
உறுப்பினர் இரா.சாணக்கியன், பாடசாலையின்
முன்னாள் அதிபர்கள், மட்டக்களப்புதமிழ்ச்சங்க
தலைவர் வி.றஞ்சித மூர்த்தி , பாடசாலை
பழைய மாணவர்கள் மற்றும் தற்போதுள்ள
மாணவர்கள் என பலர் கலந்து கொண் டனர்.

## கல்விச் சேவையாளர்களுக்கு கல்முனையில் கௌரவிப்பு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை கல்வி வலய இஸ்லாம் பாட ஆசிரியர்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த புதிய வலயக்கல்வி பணிப்பாளரை வரவேற்கும் நிகழ்வும், கல்விச் சேவையில் 37 ஆண்டுகள் சேவையாற்றி ஓய்வு பெற்றுச்செல்லும் ஆசிரிய ஆலோசகரை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் கல்முனை வெஸ்லி உயர்தர பாடசாலை நல்லதம்பி மண்டபத்தில் இஸ்லாம் பாட உதவி கல்வி பணிப்பாளர் ஏ.பி.நஸ்மியா ஸனூஸ் தலைமையில் நேற்று நடைபெற்றது.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளராக அண்மையில் பதவியை பொறுப்பேற்றுக் கொண்ட எம்.எஸ் சகுதுல் நஜீம் இஸ்லாம் பாட ஆசிரியர்களினால் பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இஸ்லாம் பாட ஆசிரியராகவும் ஆசிரிய ஆலோசகராகவும் கல்விச் சேவையில் 33 ஆண்டுகள் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் எஸ் சிராஜுதீன், பொன்னாடை போர்த்தி, வாழ்த்துப்பா வாசிக்கப்பட்டு, நினைவுச் சின்னம் வழங்கி அதிதிகளினால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான ஏ.எச்.எம். பௌசர், ஜாபிர், திருமதி ஜிஹானா ஆலிப், வெஸ்லி உயர்தர பாடசாலையின் அதிபர் எஸ்.கலையரசன் மற்றும் வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.





## வடக்கு, கிழக்கின் உறவுப் பாலமாக பரிணமித்துள்ளது கூட்டுறவுத்துறை

### சிக்கன கடனுதவு கூட்டுறவு சமாசத் தலைவர் விளக்கம்






(நூருல் ஹுதா உமர்)

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடையிலான உறவுப் பாலமாக கூட்டுறவுத் துறை தற்போது பரிணமித்து உள்ளது என்று கல்முனை அம்பாறை மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சமாச தலைவர் எஸ். லோகநாதன் தெரிவித்தார்.

பொருத்தமான சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கத்தை காரைதீவு பிரதேசத்தில் புனரமைப்பதற்கான முன்னோடிகூட்டம்நேற்றுபுதன்கிழமை இடம்பெற்றது. இதில் சமாச தலைவர் எஸ். லோகநாதன் மற்றும் உப தலைவர் ரீ. ரூபாகரன் ஆகியோருடன் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆறுமுகம் நடராசசிங்கம் ஆகியோர் பங்கேற்றனர்.

சமாச தலைவர் லோகநாதன் இங்கு மேலும் கூறியவை வருமாறு:-

புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழ் உறவுகள் வட மாகாணத்தில் ஏராளமான அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து வருகின்ற நிலையில் தற்போது கிழக்கு மாகாணத்திலும் கூடுதலான வேலைத் திட்டங்களை மேற்கொள்ளத் தொடங்கி உள்ளனர். குறிப்பாக நேதர்லாந்து நாட்டின் மனித நேய கூட்டுறவு சங்கத்தின் பங்களிப்புடன்
அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ் கிராமங்
களில் பல வேலைத் திட்டங்களும் முடுக்
விடப்பட்டு உள்ளன.

நாவிதன்வெளி, பாண்டிருப்பு, மல்வத்தை
மல்லிகைத்தீவு போன்ற கிராமங்களை உதார
ணத்துக்கு சொல்ல முடியும். விவசாயம், நெசவு
வீட்டு தோட்டம், மீன் பிடி போன்ற க சுய தொழில்
முயற்சிகள் சார்ந்து ஊக்குவிப்புகளை மேற்
கொள்கின்றனர். காரைதீவு பிரதேசத்தில் மீன
வர்களுக்கான தொழில் வாய்ப்பு, வாழ்வாதாரப்
ஆகியவற்றை மேம்படுத்துகின்ற வேலை தி
டங்களை விரைவில் ஆரம்பிக்க உள்ளன
என்பது குறிப்பிடத்தக்கது. சமாசத்தின் தலைவ
என்கிறவகையில் அவர்களுடைய நம்பிக்கையை
நான் வென்று இவ்வேலை திட்டங்கள் சரியாகவும்
முறையாகவும் முன்னெடுக்கப்படுவதை
உறுதிப்படுத்துவனாக உள்ளேன்.

அரசியல்வாதிகள் வாக்குறுதிகளை
வழங்குவார்கள். வாக்குகளை பெற்று சென்று
விடுவார்கள். அவர்கள் தேர்தல்களில் வென்று
சுக போகங்களை அனுபவிப்பார்கள். மீண்டும்
இன்னொரு தேர்தலுக்கு வருவார்கள். பாவம் மக்
கள். ஆனால் நாம் அவ்வாறானவர்கள்.- அல்லர்
என்றார்.



# இனவாத, மதவாத அதிகாரிகளாலயே மோசமான பொருளாதார நெருக்கடி




## வட்டமடு காணி மீட்பு குழு செயற்பாட்டாளர் சீற்றம்

(நூருல் ஹுதா உமர்)


மதவாதமும், இனவாதமும் இந்த நாட்டின் பொருளாதாரத்தை அதலபாதாளத்துள் தள்ளியுள்ளன என்பதுதான் உண்மை. இந்த நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவிருக்கும் விவசாயத்தை செய்கை பண்ண முடியாத ஒரு சூழ்நிலையை இனவாதக் கொள்கையுடைய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தடுப்பது வேடிக்கையாகவிருக்கிறது என வட்டமடு காணி மீட்பு குழுவின் செயற்பாட்டாளர் பன்நூல் ஆசிரியர் கவிஞர் கால்தீன் தெரிவித்தார். அவரது அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது :-

உலகத்தில் விவசாயம் செய்கை பண்ணுவதை ஊக்கிவிக்கும் இவ்வேளையில், இலங்கை போன்ற வளமிக்க ஒரு நாட்டில் இனவாதச் சிந்தனையோடு ஏழை விவசாயிகளின் காணிகளை சுவீகரித்து அதைத் தடுப்பது வேடிக்கையாகவிருக்கிறது. இந்த நாட்டின் அபிவிருத்திக்காகவும் எழுச்சிக்காகவும் முஸ்லிம்களின் பங்களிப்பு எப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறது.

1970 ஆம் ஆண்டிலிருந்து செய்கை பண்ணப்பட்டு வந்த வட்டமடு விவசாயக் காணிகள் இப்போது விவசாயம் செய்ய அனுமதிக்கப்படாமல் அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. நிலவளமும், நீர்ப்பாசனமும் நிறைந்த காடற்ற இக்காணிகளை மக்களிடம் செய்கை பண்ணக் கொடுப்பதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பேசி தீர்வு கிடைக்கவில்லை. இந்த அதிகாரிகளுக்கும், அமைச்சர்களுக்கும் தூரநோக்கு சிந்தனை இல்லாத காரணத்தால்தான் இன்று நாடு மிக மோசமான பஞ்சத்தை எதிர் நோக்கி நிற்கிறது.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரைச் சந்தித்தும் தீர்வு கிடைக்காத நிலையில், இது தொடர்பாக ஜனாதிபதியின் மேலான கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறோம். இனவாதத்தைக் களைந்து ஒரு தாய் பிள்ளைகளாய் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் முன்வர வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். - என்று தெரிவித்துள்ளார்.

# மல்ஷா குமாரதுங்க போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டாரா?



முன்னாள் அரசியல்வாதி ஜீவன் குமாரதுங்கவின் மகள் மல்ஷா குமாரதுங்க 2 கிலோ போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார் என சமூக ஊடகங்களில் பரவி வரும் செய்திகளை அவர் மறுத்துள்ளார்.

இது தொடர்பாக மல்ஷா குமாரதுங்கவிடம் பிரபல ஆங்கில ஊடகம் வினவியது போது, அந்தச் செய்திகள் பொய்யானவை என்றும், அவர் தனது தாயுடன் தனது வீட்டில் இருக்கிறார் எனவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தெரியவருவதாவது –

மல்ஷா செவ்வாய்க்கிழமை இரவு காரில் பயணித்தபோது பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டார் எனவும், அந்த காரில் 2 கிலோ 'குஷ்' போதைப்பொருள் மீட்கப்பட்டதாகவும் பின்னர் அவர் உடனடியாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவுக்கு தொலைபேசி அழைப்பு எடுத்து சில நிமிடங்களில் சம்பவ இடத்துக்கு வந்த அவர் பொலிஸாரை மிரட்டினார் எனவும் சமூக ஊடகங்களில் செய்திகள் பரவியது.

இந்நிலையில், பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளிடம் பிரபல ஆங்கில ஊடகம் தொடர்பு கொண்டு கேட்டபோது , மல்ஷாவின் கைது தொடர்பாக தங்களுக்குத் தெரியாது என்று தெரிவித்துள்ளனர்.

# அக்கரைப்பற்றில் நாளை அஷ்ரப்பின் நினைவேந்தல்



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் மறைந்து 22 ஆம் ஆண்டு நிறைவையொட்டிய நினைவேந்தல் நிகழ்வு நாளை 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு அக்கரைப் பற்று அய் னாஹ் கடற்கரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது .

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் , விசேட அதிதியாக பிரபல கவிஞரும், தென்னிந்தியத் தமிழ்த் திரைப்பட நடிகருமான வ. ஐ .ச.ஜெயபாலன் கலந்து கொள்வார். நினைவுப் பேருரையை தென்கிழக்குப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ் நிகழ்த்தவுள்ளமையோடு, 'ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் சம கால அரசியலும்' என்ற தொனிப் பொருளில் கட்சியின் தவிசாளரும், முன்னாள் வடகிழக்கு மாகாண சபை உறுப்பினருமான ஏ.எல்.அப்துல் மஜீத் உரையாற்றுவார். ஏனைய நினைவு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

நாடெங்கிலுமிருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினர்கள் உட்பட, பெருமளவிலான கட்சி அங்கத்தவர்களும், ஆதரவாளர்களும் இந் நிகழ்வில் கலந்து கொள்வார்களெனக் கட்சியின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.



# நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட ஐந்து பேருக்கு எதிரான பணமோசடி வழக்கு ஒத்திவைப்பு

விளையாட்டுத்துறை முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட ஐவருக்கு எதிரான பணமோசடி சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்கின் விசாரணையை கொழும்பு மேல் நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது. மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க இந்த வழக்கை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 8ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக அறிவித்துள்ளார்.

அத்துடன் வழக்கின் சாட்சிகளை அடுத்த விசாரணை திகதியில் நீதிமன்றத்தில் முன்னிலையாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கோவர்ஸ் கோர்ப்பரேட் சேர்வீசஸ் (பிரைவேட்) லிமிடெட் மூலம் 3 கோடி ரூபா பணத்தை மோசடி செய்ததாக குற்றம்சாட்டப்பட்ட நாமல் உட்பட்ட ஆறு பேருக்கு எதிராக சட்டமா அதிபர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார். நாமல் ராஜபக்ஷ, இந்திக கருணாஜீவ, சுஜானி போகொல்லாகம, இரோ சில்வா, நித்ய சேனானி சமரநாயக்க மற்றும் கோவர்ஸ் கோர்ப்பரேட் சேர்வீசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஆகியோரின் நிறுவனங்களுக்கு எதிராக பணமோசடி தடுப்புச்சட்டத்தின் கீழ் 11 பிரிவுகளின் கீழ் சட்டமா அதிபர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார். கொழும்பு 5 ஐச் சேர்ந்த கோவர்ஸ் கோர்ப்பரேட் சேர்வீசஸ் (பிரைவேட்) லிமிடெட் , ஸ்ரீலங்கன் ஏர்லைய்க்கான ஒருங்கிணைப்புச் சேவைகளை வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. ஊழலுக்கு எதிரான குரல் அமைப்பின் அழைப்பாளர் வசந்த சமரசிங்கவின் முறைப்பாட்டையடுத்து, இந்த பண மோசடி தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.







# பள்ளிபோருவை மு.வி. பவள விழா

ஹெம்மாதகமை பள்ளிபோருவை முஸ்லிம் வித்தியாலயத்தின் 75 ஆவது வருட பூர்த்தி பவள விழா நாளை வெள்ளிக்கிழமை காலை அதிபர் எம்.எஸ் எம்நிஸாம் அன்வாரி தலைமையில் பாடசாலை வளாகத்தில் நடைபெற்ற உள்ளது.பிரதம அதிதியாகச் சபரகமுவ மாகாண கல்விப் பணிப்பாளர் குறுப்பு ஆராய்ச்சி, சிறப்பு அதிதிகளாகதிட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் அன்பாப் தாவுத், ஆரம்பப் பிரிவு பணிப்பாளர் கோரலகே ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.09.2022இல் வெளியிடப்பெற்றது.